# இராமேஸ்வரம் நகர் மன்றகூட்டம்

## 2018 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27ம் தேதிகாலை 11 : 00 மணிக்கு நடைபெற்ற நகர்மன்றக் கூட்ட நடவடிக்கை

**முன்னிலை: அ. வீரமுத்துகுமார் B.Tech.,**
**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர், இராமேஸ்வரம் நகராட்சி**

| பொருள் எண் | பொருள்விபரம் | தீர்மானவிபரம் |
|---|---|---|
| 1 | அரசாணைநிலை எண்.11 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல்துறை நாள்.12.01.1999–ன் படி நகராட்சி பகுதியில் தொழில் புரிவோர் மற்றும் அரசு அலுவலகஙகளில் பணி புரிவோருக்கும் தொழில்வரி விதிக்கவும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 124(4) ஆணை பிரிவு 13–ன் படி தொழில்வரியை 25 சதவீதத்திற்கு குறையாமல் 35 சதவீதத்திற்கு அதிகமாகாமலும் தொழில்வரி திருத்தம் செய்து 01.10.2018 முதல் அமலாக்கம் செய்யமன்றத்தின் முடிவிற்கு வைக்கப்பட்டுள்ளது. | தீர்மானம் எண். 135 அனுமதிக்கப்பட்டது. |

| வ.எண் | சராசரி 6 மாதவருமானம் | தற்போதுவசூல்செய்யப்படும் தொகை | சீராய்வுசெய்யப்படும் சதவிகிதம் | சீராய்வுசெய்யப்படும் தொகை |
|---|---|---|---|---|
| 1. | ரூ.21000 வரை | இல்லை | 30% | இல்லை |
| 2. | ரூ.21001 முதல் ரூ.30000 வரை | 118 | 30% | 153 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | ரூ.21001 முதல் ரூ.30000 வரை | 294 | 30% | 382 |
| 4. | ரூ.21001 முதல் ரூ.30000 வரை | 586 | 30% | 762 |
| 5. | ரூ.21001 முதல் ரூ.30000 வரை | 880 | 30% | 1144 |
| 6. | ரூ.21001 முதல் ரூ.30000 வரை | 1173 | Not Exceed Rs.1250/- half Year | 1250 |

**அலுவலகக்குறிப்பு**

01.10.2018 முதல் தற்போதுள்ள 6 மாத தொழில்வரியினை 25 சதவீதத்திற்கு குறையாமலும் 35 சதவீதத்திற்கு மிகாமலும் தொழில்வரியினை சீராய்வு செய்யமன்றம் அனுமதிக்கலாம்.

Article 276 clause (2) Constitution of India -ன் படி தொழில்புரிவோர் மற்றும் அரசு அலுவலகங்களில் பணிபுரிவோர் தொழில்வரித் தொகை செலுத்துவது ஆண்டிற்கு ரூ.2500–க்கு மிகாமல் இருக்கவேண்டு மென நகராட்சி ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 12503/2018/ஆர்1, நாள்.21.05.2018ல் அறிவுரை வழுங்கப்பட்டுள்ளதன் படி தொழில்வரி உயர்வு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| 2 | இராமேஸ்வரம் நகராட்சி தனியார் மயம் மூலம் 144 துப்புரவு பணியாளர்களை சுகாதார பணிகளை மேற்கொள்ளும் பணிக்கு 07.05.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 05 எண்ணம் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. அதனை 23.05.2018 அன்று கூராய்வு செய்ததில் 02 நிறுவனஙகளிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிக்கு தொழில்நுட்ப தகுதிகள் உள்ளது. அவ்வாறு தொழில்நுட்ப தகுதி வாய்ந்த 02 நிறுவனஙகளிடமிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளி அடஙகிய உறை 01.06.2018 அன்று திறக்கப்பட்டு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>1 Hand in Hand inclusive Development & Services Rs.450/-<br>2 Our land Engineering works Pvt Ltd. Rs.455/-<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br><br>மேற்காணும் 02 எண்ணம் விலைப்புள்ளிகளின் குறைந்தபட்ச விலைப்புள்ளி தொகை ரூ,450/– கொடுத்துள்ள Hand in Hand inclusive Development & Services நிறுவனத்தின் விலைப்புள்ளி தொகையினை ஏற்கலாம். | **தீர்மானம் எண். 136 அனுமதிக்கப்பட்டது.** |
| 3 | இராமேஸ்வரம் நகரம் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள இரண்டாம்நிலை நகராட்சி ஆகும். இந்நகராட்சி தற்போது 21 வார்டுகளை உள்ளடக்கியதாகவும் நகரப்பகுதி 53 ச.கிமீ பரப்பளவில் 44,856 மக்கள் தொகையுடன் (2011 கணக்கெடுப்பின்படி ) அமைந்துள்ளது. சுற்றுலாவும் மீன்வளம் முதன்மை பணிவாய்ப்புகளாக உள்ளன. வாரணாசிக்கு இணையான புனித வழிபாடுத்தலமாக இராமேசுவரம் இந்துக்களால் கருதப்படுகிறது. இராமேஸ்வரம் நகரம் இராமாயண கால வரலாற்றுத் தொடர்புடைய புண்ணிய பூமியாதலால் இந்நகர் பகுதிக்கு வெளியூர், வெளிமாநில மற்றும் வெளிநாட்டில் இருந்து | **தீர்மானம் எண். 137 அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | ஆண்டுதோறும் 2 கோடிக்கும் மேல் யாத்ரீகர்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் வந்து செல்லக்கூடிய இடமாக உள்ளது.<br><br>இராமேஸ்வரம் நகருக்கு வருகைபுரியும் யாத்ரீகர்கள் மற்றும் சுற்றுலாப்பயணிகள் தனியாருக்கு சொந்மான விடுதிகள் மற்றும் தஙகுமிடஙகளில் தஙக வேண்டிய சூழ்நிலை ள்ளது. இராமேஸ்வரம் நகரில், 148 விடுதிகள் மற்றும் தஙகுமிடஙகள் உள்ளன. இராமேஸ்வரம் நகருக்கு வரும், யாத்ரீகர்கள் மற்றும் சுற்றுலாப்பணிகளின் எண்ணிக்கையிடன் ஒப்பிடும் பொழுது, விடுதிகள் மற்றும் தஙகுமிடஙகளின் எண்ணிக்கை மின குறைவான அளவில் உள்ளது. இதனால் சுற்றுலாப் பயணிகளின் தஙகுமிடம்தேவையை நிறைவு செய்ய இயலாத சூழ்நிலையில் உள்ளது.<br><br>மேலும், இந்நகர் பகுதியில் உள்ள விடுதிகள் மற்றும் தஙகுமிடஙகளில் அதிகமான வாட்கை வசூல் செய்கின்றனர். தை, ஆடி அமாவாசை மற்றும் விழாக்காலஙகளில் இருமடஙகு வாகை கட்டணம் வசூல் செய்கின்றனர். எனவே, இந்நகருக்கு வருகை தரும் யாத்ரீகர்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் மிகவும் சிரமப்படுகின்றனர்.<br><br>யாத்ரீகர்கள் மற்றும் சுற்றுலாபயணிகள் பயன்பெறும் வகையில் இராமேஸ்வரம் நகராட்யினால் குறைந்த வாடகை கட்டணத்தில் விடுதி / தஙகுமிடம் வசதிகள் ஏற்படுத்தி கொடுக்கலாம். நகராட்சியின் மூலம் விடுதிகள் மற்றும் தஙகுமிட வசதிகள் ஏற்படுத்திதர உத்தேச செலவினம் ரூ. 5.50 கோடி ஆகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இச்செலவினத்தினை மேற்கொள்ள நகராட்சியில் போதுமான நிதி ஆதாரஙகள் இல்லாததின் காரணமாக தனியார் மற்றும் நகராட்சி பஙகளிப்புடன் (PPT Mode) தஙகமிட வசதிகள் ஏற்படுத்தலாம். | |

| | | |
|---|---|---|
| | இந்நகராட்சி வார்டு எண் 21 சர்வே எண் 132/1ல் இந்நகராட்சிக்கு சொந்தமான 6925.00 சதுரமீட்டர் பரப்பளவு கொண்ட இடம் பல ஆண்டுகளாக காலியிடமாக உள்ளது. அவ்விடத்தில் இந்நகர் பகுதிக்கு வந்த செல்லும் யாத்ரீகர்கள் மற்றும் சுற்றுலாப்பயணிகள் பயன்பெறும் வகையில் தங்கும் விடுதிகள் அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் (PPT Mode) அமைப்பவதற்கு வெளி சந்தையில் ஒப்பந்தப்புள்ளி கோரவும், பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்ய தொழில் நுட்ப கூர்ந்தாய்வு குழு அமைக்கவும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br><br>மன்றம் ஒப்புதல் அனுமதிக்கலாம். | |
| **4** | இராமேஸ்வரம் நகராட்சியில் நடைபெற்றுவரும் பணிகள் மற்றும் ஒப்பந்தப்புள்ளி தொடர்பாக தினசரி நாளிதழில் விளம்பரம் செய்த வகையில் கீழ்காணும் விளம்பரம் நிறுவனங்களுக்கு கட்டணத்தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>1. மாலைமுரசு – ரூ. 17850<br>2. Accord Agency – ரூ. 212678<br>3. தினபூமி – ரூ. 5250<br>4. தினத்தந்தி – ரூ. 45791<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br><br>அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண். 138 அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| **5** | இராமேஸ்வரம் நகராட்சி தொடர்பான இராமேஸ்வரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்குகளுக்கு வழக்கு கட்டணம் கீழ்கண்டவாறு வழக்கறிஞருக்கு வழங்க ஆணையரின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>1. M. Kannan – ரூ. 24000<br>2. R. Vijayakumar – ரூ. 45100<br>3. R. Vijayakumar – ரூ. 25700<br><br>**அலுவலக குறிப்பு:**<br><br>அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண். 139 அனுமதிக்கப்பட்டது.** |

**ஆணையாளர்/தனிஅலுவலர்,**
இராமேஸ்வரம் நகராட்சி.